1986 மே 3]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்திற்கு உலக வங்கி அளித்து வரும் உதவி 30—6—1986 வரை கிடைக்கும்.

சென்னையில் மகளிர் விடுதிகள்.

624—(*வினா எண். 6894) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் சமூக நலத் துறையால் மகளிர் தங்குவதற்கு மேலும் விடுதிகள் கட்டுவதற்கு அரசு பரிசீலித்து வருகிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: இல்லை.

(முற்பகல் 10-00.)

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிட்டார்கள். பரவாயில்லை. சென்னையில் சமூக நலத் துறையால் நடத்தப்படும் மகளிர் தங்கும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த விடுதிகளில் எத்தனை பெண்கள் வசிக்கிறார்கள் என்பதையும், சென்னையில் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் எத்தனை இருக்கின்றன? அந்த தனியார் விடுதிகளுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பணிபுரியும் மகளிருக்காக 2 விடுதிகள் சமூக நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலும், கிண்டியிலும் அந்த விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எழும்பூரிலே 35 அங்கத்தினர்களும், கிண்டியில் 50 அங்கத்தினர்களும் தங்கி இன்றைக்கு அந்த வசதிகளை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிறுவனங்கள் எவ்வளவு என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமாக இயங்கும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் 10 சென்னையில் இருக்கின்றன. (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தனியார் நிறுவனங்களுக்கு பலவிதமான அடிப்படையில் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிர் நலம், சமூக நலம், மகளிர் கல்வியில் பொறுப்புடையவர்கள் போன்ற அந்த நிறுவனங்களும், மற்றும் சில பொது நிறுவனங்களும், சமூக நலத்துறையின் கீழ் உள்ள திட்டங்களின் மூலமாக சில திட்டங்களை மேற்கொள்ளும் தகுதி உடையவர்களாவார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் விடுதிகளைக் கட்டுவதற்காக—தனியார் நிறுவனங்கள் கட்டுவதற்காக—75 விழுக்காடு மைய அரசும் மானியம் கொடுக்கிறது. மைய அரசின் மானியத்தை முழுவதுமாக பெற்றதற்குப் பிறகுதான் மாநில அரசு உதவி தருகிறது. மாநில அரசு 15 விழுக்காடு அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைவோ அத் தொகையை வழங்கும். மீதம் உள்ள பத்து விழுக்காடு, அந்த நிறுவனமே, மகளிர் விடுதியை ஏற்று நடத்தக்கூடிய அந்த நிறுவனமே ஏற்கிறது.

விமான தளங்களின் சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு.

கு. கா வி. எண். 9—(* வினா எண். 9137) திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விமான தளங்களுக்கு அருகிலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி விபத்தை தடுக்க சுற்றுப்புற தூய்மை நிர்வாகக் குழு Environment, Management Committee என்ற அமைப்பை அரசு ஏற்படுத்தியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: சிவில் மற்றும் விமானப் படை விமானங்களுக்கு பறவைகளினால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கும் வழிவகையை ஆராயும் பொருட்டு தமிழ்நாடு அரசு 1980-ல் விமானதள சுற்றுப்புறத் தூய்மை நிர்வாகக் குழு என்ற ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறையின் ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர் இதன் தலைவராவார். இக்குழுவில்